## அரிசோனா



# நல்ல சொத்து

*"அதை எப்படித்தான் வாங்கினோமென்று தெரியவில்லை. தேவன்தாம் கதவைத் திறந்தார்"*

அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில், நவஜோ சரணாலயப் பகுதியில் ஒரு சபை ஒன்றை நிறுவுவதற்கு செவந்த்-டே அட்வென்டிஸ்டுகள் திட்டமிட்டார்கள். 2011ம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் உதவியால் உலகம் முழுவதிலுமிருந்து அதற்கான உதவி கிடைத்தது. ஆனால் ஒரு பெரிய பிரச்சினை; எங்கு அந்தச் சபையைக் கட்டலாம் என்று கேள்வி எழுந்தது.

நவஜோ சரணாலயப்பகுதியின் எல்லையில் அமைந்திருந்த பேஜ்நகரம்தேர்வுசெய்யப்பட்டது. ஆனால் அங்கு நினைத்த இடத்தில் ஆலயத்தைக் கட்டமுடியாது. எல்லா சபைகளும் ஒரு குறிப்பிட்ட தெருவில்தான் இருக்கவேண்டும் என்று அந்நகரத்தில் ஒரு சட்டம் இருந்தது. ஆலயங்கள் அதிகமாக இருந்ததால், அந்தத் தெருவானது 'ஆலய அடுக்கு' அல்லது 'புனித வளைவு' என்று அழைக்கப்படுவதுண்டு.

ஆனால் புதிதாக ஒரு ஆலயம் கட்டுவதற்கு அந்தத் தெருவில் இடமில்லை. எனவே ஏற்கனவே இருக்கிற ஆலயங்களில் ஏதாவது விற்பனைக்கு இருந்தால் மட்டுமே அதை வாங்கமுடியும்.

அந்தத் தெருவில் ஒரு ஆலயம் பயன்பாட்டில் இல்லாமல் இருந்தது. சதர்ன் பேப்டிஸ்ட் சபை என்கிற அந்த ஆலயத்தின் உறுப்பினர்கள் அனைவரும் வயதாகி, இறந்துவிட்டதால், அது பாழடைந்து கிடந்தது. அந்த ஆலயத்தைக் கவனித்து வந்த மூப்பர், அதை விற்பதற்குத் திட்டமிட்டார்.

அந்தச் சொத்தின் மதிப்பை மதிப்பீட்டாளரை வைத்து கணக்கிட்டார்கள். அதன் மதிப்பு 8,50,000 அமெரிக்க டாலர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அட்வென்டிஸ்டுகளிடம் அவ்வளவு பணம் இல்லை. புதிதாக சபை வாங்குவதற்குச் சேகரிக்கப்பட்ட பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் தொகை அதைவிட குறைவாக இருந்தது. பதின்மூன்றாம் வாரக் காணிக்கையுடன் பொதுவாகச் சேர்க்கப்படுகிற வட அமெரிக்க டிவிஷன் மற்றும் பிற டிவிஷன்களின் காணிக்கையையும் சேர்த்தாலும்கூட அந்தச் சொத்தை வாங்குவதற்கு தேவையான பணம் கிடைக்காது. அட்வென்டிஸ்ட் தலைவர்கள் அந்த மூப்பரிடம் பேசினார்கள்; ஜெபித்தார்கள்.

அந்தச் சொத்தை வாங்குவதற்கு அட்வென்டிஸ்டுகள் மட்டுமே ஆர்வம் காட்டவில்லை. அந்நகரத்திற்குள் வருவதற்கான ஒரு பிரதான சாலையில் அந்தச் சொத்து இருந்தது. அதனருகே ஒரு அரசுபள்ளியும் அமைந்திருந்தது. அமெரிக்காவின் சங்கிலி அமைப்பு உணவகங்களில் ஒன்று, அங்கே ஒரு உணவகத்தைத் திறக்கவும் திட்டமிட்டிருந்தது. அவர்கள் அந்த மூப்பரைத் தொடர்புகொண்டு, அந்த இடத்தை 2 மில்லியன் அமெரிக்க டாலருக்கு வாங்குவதாகச் சொன்னார்கள்.

அந்த மூப்பருக்கு அது கடினமான தீர்மானமாக இருந்தது. அந்த இடத்தின் மதிப்பு 8,50,000 டாலர்; அதை வாங்குவதற்கு அட்வென்டிஸ்டுகள் ஆர்வம் காட்டினார்கள்; ஆனால் பிரபல உணவு நிறுவனம் அதை 20,000,000 டாலருக்கு வாங்க முன்வந்தது.

அந்த மூப்பர் ஊக்கமாக ஜெபித்தார். அங்கே ஒரு உணவகம் வருவதைவிட ஆலயம் வருவதே முக்கியமென உணர்ந்தார். சவுத் பேப்டிஸ்ட் சபையினரிடம் அந்த இடத்தை 2,50,000 டாலருக்கு அட்வென்டிஸ்டுகளுக்கு விற்பனை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். பிறகு, அந்தத் தலைவர்களின் அனுமதியுடன், அந்த விலைக்கே அட்வென்டிஸ்டுகளுக்கு விற்றார். பதின்மூன்றாம் வாரக் காணிக்கையையும், பிற தொகைகளையும் சேர்த்தாலும்கூட அந்தத் தொகை வரவில்லை.

“அதை எப்படித்தான் வாங்கினோமென்று தெரியவில்லை. தேவன்தாம் கதவைத் திறந்தார்” என்று சொன்னார் நேன்சி கிராஸ்பி; இவர் நவஜோ சரணாலயப் பகுதியில் பழங்குடியின அமெரிக்கர்களுக்கான அட்வென்டிஸ்ட் ஊழியத்தைக் கவனித்து வருகிறார்.

பொதுவாக புதிதாக ஒரு சபையை நிறுவும்போது, ஏற்கனவே அங்கு வீட்டுச்சபை இருக்கும்; அங்கே ஐந்து அல்லது ஆறு பேர் ஆராதனைசெய்து வந்திருப்பார்கள். உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்து, கூடுவதற்கு இடம் போதாமல் இருக்கும்போதுதான் புதிதாக இடம் வாங்கி ஆலயம் கட்டுவார்கள். பேஜ் நகரத்தில், அங்கிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட ஆலயம் மிகப் பெரிதாகக் கட்டப்பட்டது.

“குதிரைகள் வருவதற்கு முன்



**பேஜ் சபையிலுள்ள ஒரு தோட்டத்தில் நிற்பவர் நேன்சி கிராஸ்பி**

னரே வண்டிகளை தயார் செய்தது போன்றுதான் இருந்தது. ஆனால் எல்லாம் தேவனுக்குத் தெரியும்'' என்று சொன்னார் நேன்சி.

2011ம் ஆண்டில் கொடுக்கப் பட்ட பதின்மூன்றாம் வாரக் காணிக் கைக்காக நன்றி; அரிசோனாவின் பேஜ் நகரத்தில் பேஜ் சர்வதேச செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபை யை நிறுவுவதற்கு அது உதவியது. பழங்குடியின அமெரிக்கர்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து வருபவர் களுக்காக ஜெபியுங்கள்; அவர்க ளில் நேன்சியும், அந்தச் சபையின் போதகரும் அவருடைய கணவரு மான ஜேம்ஸும் உண்டு.

## கதைக் குறிப்புகள்

- அரிசோனாவில் உள்ள ஹால் புரூக்கை வரைபடத்தில் காட்டுங்கள்.
- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- வட அமெரிக்க டிவிஷனிலிருந்து ஊழிய விவரங்களையும் துணுக்குகளையும் பதி விறக்க: bit.ly/nad-2024.
- செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபைசின் "ஐ வில் கோ" என்ற திட்டத்தின் பின் வரும் நோக்கங்களை இந்த ஊழியக்கதை விளக்குகிறது.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 2, '10/40 சாளரம் முழுவதும், பெரிய நகரங் களில், சத்தியம் சென்றிராத பகுதிகளிலும் சத்தியம் குறைவாகச் சென்றுள்ள பகுதிக ளிலும் அட்வென்டிஸ்ட் ஊழியத்தைப் பெலப்படுத்தவேண்டும்'.
- அமெரிக்காவில் அதிகாரப்பூர்வ மொழி கிடையாது. அங்கு 350க்கும் அதிகமான மொழி கள் பேசப்படுகின்றன; அதில் முன்னிலையில் இருப்பது ஆங்கிலம் மற்றும் ஸ்பானிஷ் மொழிகள்.
- அமெரிக்காவில் மிக நீளமான நதி மிசௌரி நதியாகும்; அதன் நீளம் 2,341 மைல் (3,767 கி.மீ). மான்டனா, வடக்கு டகோடா, தெற்கு டகோடா, நெப்ராஸ்கா, அயோவா, கன்சாஸ், மிசௌரி ஆகிய மாகாணங்களைக் கடந்து, அந்நதி பாய்கிறது.
- அமெரிக்காவின் மிகவும் வெப்பமான பகுதி டெத் வேலி; மிகவும் தாழ்வான பகுதி பேட் வாட்டர் பேசின்; அந்த உப்பு நிலப்பகுதியானது கடல் மட்டத்திற்கு கீழே 282 அடியில் (86 மீட்டர்) அமைந்துள்ளது.